# சித்தர்களின் சிந்தனைப் பதிவுகள்

முனைவர் ச. முத்துப்பாண்டியம்மாள்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ முத்துக் குமரன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மாங்காடு அருகில், சென்னை – 69.

49

**முகப்புரை**

காடு திரிந்து காற்று புசிப்பவர்கள் சித்தர்கள். சித்தத்தை அறிந்தவர்கள். ஓன்றின் நோக்கத்தைக் கண்டறிந்து அதன் வழியில் பயணிப்பவர்கள். காரணகாரியத்தோடு நோக்கும் வல்லமை உடையவர்கள். எதனையும் அறிவியல் தன்மையோடு ஆராயும் ஆய்வறிஞர்கள். இன்று எத்தனையோ விஞ்ஞான தொழில் நுட்பங்கள் கண்டுப்பிடிக்கக்கூடிய கண்டுப்பிடிப்புகளையெல்லாம் இயற்கையின் துணையோடு தனது மதிநுட்பத்தால் விளக்கியவர்கள். சூழ்நிலைகளைக் கண்டு அவற்றையெல்லாம் தனது மனிதசக்திக்கும் மூளைக்கும் இடையே நடக்கக்கூடிய அறிவியல் பாதையில் அற்புதமாக விளக்கிக்காட்டியிருக்கும் அற்புத பேர்வழிகள் சித்தர்கள். மனிதனின் வாழ்வியலை வளமான பாதையில் செறிவாக நடத்தியவர்கள். தங்களை நாடி வந்தவர்களுக்கு நலமான சிந்தனைகளையும் செய்திகளையும் வழங்கியவர்கள். மனிதனை மனிதனாக வாழ்வதற்கு கற்றுத்தந்த கல்வியாளர்கள். சித்தர்களின் காலம் தமிழ் மருத்துவக்கலையின் பொற்காலமாகும் (கி.பி. 5 முதல் 18 வரை). இன்று கிடைக்கின்ற இலக்கிய சான்றின்படி திருமூலரின் "திருமந்திரம் 3000" எனும் நூலே சித்த தத்துவக் கருத்துகளை நேரடியாக விளக்கும் முதல் நூலாகும். திருமூலர் 8000" என்னும் நூல் நிறைய மருத்துவக் குறிப்புகளை அடக்கியுள்ளதாக சொல்லப்பட்டாலும் இந்நூலை பெறமுடியவில்லை. எனவே திருமூலரைச் சித்த மருத்துவத்தின் தந்தையாக போற்றப்படுகிறார்.

தனிமனிதனின் வாழ்வானது சிறந்து விளங்க வேண்டுமெனில் அவனது வாழ்க்கை முறையில் நோயற்ற வாழ்வு காணப்படுதல் வேண்டும். இதனை, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பழமொழி விளக்குகின்றது. ஒரு நாடு, சமுதாயம், குடும்பம் நன்முறையில் சிறந்து விளங்குமெனில் அங்கு நல்லதொரு அறிவியல் வளர்ச்சியினை நாம் கண்கூடாக காணமுடியும். எந்தவொன்றையுmம் உண்மைத் தன்மையின் அடிப்படையில் விளக்குவதே அறிவியல் என்று கூறுகிறார்கள். அவ்வாறாக சித்தர்கள் என்பவர்கள் அண்ட முழுவதிலும் காணக்கூடிய அனைத்துப் பொருட்களையும், மனிதனின் உடலமைப்புக் கூறுகளையும், அண்ட வெளியில் உலவி வரும் கோள்களையும் உண்மைத்தன்மையின் அடிப்படையில் ஆராய்ந்து அறிந்து, அதனால் ஏற்படும் விளைவுகளையும் நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தி கண்டுணர்த்தியிருப்பது பிரமிக்கக்கூடிய செயலாகும்.

சித்தர்களின் தோற்றம் சிந்தனைக்குரியது. மக்கள் சமுதாயத்தில் மலிந்து நின்ற பொய்மைகளை எதிர்த்துப் புரட்சி செய்த இயக்கத்தினராகத் தோன்றியவர்களே சித்தர்கள் என்பது வெளிப்படை. மக்களிடையே வாழ்ந்து, ஆசைகளில் உழன்று அனுபவத்தாலும் பட்டறிவாலும் மனித வாழ்வின் உண்மையினை உணர்ந்து உருவானவர்கள் சித்தர்கள். சித்தர்கள் அத்துணைபேரும் கற்றறிந்தவரல்லர். பாமரராய் வாழ்ந்தும், மன்னராய்த் திகழ்ந்தும், செல்வராய்ச் செழித்தும், யோகியராய் நிலைத்தும் தோன்றியவர்களே சித்தர்கள். சித்தர் இனம் நீண்ட நெடுங்காலமாக இந்த நிலத்தில் வேரூன்றி விழுது பரப்பி வருகிறது.

“ மூலன் மரபில் வந்த நான் ஒரு சித்தன்”

என பாரதி தன்னைச் சித்தர் பரம்பரையில் இணைத்துக் கொண்டு பெருமைப்படுத்தினார். தமிழில் காலந்தோறும் ஏற்பட்ட பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப் பதிவுகள் குறிப்பிடத்தக்கன. அங்ஙனம் சித்தர் பாடல்களில் காணப்படும் சிந்தனைப் பதிவுகளைக் குறித்து இக்கட்டுரையானது ஆராய முற்படுகின்றது.

சித்தரின் சிந்தனைப் பதிவுகள்

1 .குடும்பம் 2. சமூகம் 3. அரசியல் 4. பொருளாதாரம் 5. அறிவியல்  6. மருத்துவம் 7. நிலையாமை 8. இறைக்கோட்பாடு 9. கல்லாமை 10. வாழ்க்கை முறை 11. உடற்பயிற்சி 12. உடல் - உள்ளம் சிந்தனை 13. நோய் கண்டறியும் முறை

ஏன இவை போன்ற பலச் சிந்தனைப் பதிவுகளை சித்தர்கள் தங்களது பாடல்களில் விதைத்து பதித்து சென்றுள்ளார்கள்.

**வாழ்வியல் சிந்தனைகள்**

காமம் கொள்ளாமை, கள்ளுண்ணாமை, கோபம், ஆசை, கொலைசெய்யாமை, ஊன் உண்ணாமை, கல்லாமை போன்ற வாழ்வியலுக்கு புறம்பான செயல்களையெல்லாம் வேண்டாமென பதிவிட்டிருப்பதோடு சிந்தனையும் செய்திருக்கின்றனர் சித்தர்கள். காமம் அறிவை மயங்கச் செய்து உடலையும் பொருளையும் ஒருசேரப் போக்கி பின்னே நிலைகுலையச் செய்யும் தன்மை வாய்;ந்தது. காம இச்சையின் காரணமாக மனிதன் சில நேரங்களில் விலங்கு நிலைக்கு உள்ளாகும் நிலையும் ஏற்படுகிறது. அயலான் மனை செல்வத்தாலும் பருவத்தாலும் மயங்கி தாமும் மயங்கி அழிவுறுவர் பிறர்மனை விரும்புபவர்கள். இதனை,

“ வெயில் கண்ட மஞ்சள் போன்ற மாதர் அழகை
விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்
ஒயில்கண்ட இலவுகாத்து ஓடும் கிளிப்போல
உடல்போனால் ஓடுவாரென்று ஆடுபாம்பே!” பாடல் : 50

என பாம்பாட்டிச் சித்தர் சிந்தனைக்குள் சீர்படுத்துகின்றார். மக்கள் பெண் ஆசையின் காரணமாகக் காமம் கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்துகின்றனர். காமம் கொள்ளாமல் இருந்தால் தான் இறைவனை உணர முடியும் என்பதை உறுதியாக உணர்த்துகின்றார் சிவவாக்கியர்.

**கள்ளுண்ணாமை**

சமுதாயத்தில் புரையோடிப்போன தீய வழக்கங்களில் சிலவற்றுள் இதுவும் ஒன்று. இதனைகடிந்துரைக்கவும் நல்வழிப்படுத்தவும் சித்தர்கள் முயன்றுள்ளனர். திருமூலர் குடியைக்கெடுக்கும் கொடுவிடமாகக் கள்ளினைக் கருதுகின்றார்.

" காமமும் கள்ளும் கலதிகட் கேயாகும்

மாமல முஞ்சம் யத்துள் மயலுறும்"

இத்திரு மந்திர வரிகள், மயக்கம் தந்து மதியைக் கெடுத்து பொருளையும் இழியச் செய்து கரத்தையும் தருவன. இவற்றை நல்லவர்கள் எண்ணலாகாது. நல்லவர்களின் அறிவை கூட குழைப்பது கள்ளின் வேலையாகும். எனவே மக்களாய் பிறந்த ஒவ்வொருவரும் மயக்கத்தையெல்லாம் விடடொழிக்க வேண்டும், உலக போகங்களை விரும்பாமல் அறிவைக் கெடுக்கும், சமுதாயத்தில் வாழ்வின் நலனைக் கெடுக்கும் கள்ளைப் பருகாமல், கொள்ளாமல் வாழவேண்டும் என்பது திருமூலர் நமக்கு வலியுறுத்தும் சிந்தனைகளாகும்.

கோபம்

கோபம் மனிதனுடைய அழிவுக்கு வித்தாக இருக்கிறது. அது நமக்கு கெடுதியையும் பிறருக்கு தீமையையும் தரும். கோபம் நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் வரையிலும் நாம் எந்தக் காரியத்திலும் வெற்றிக் காண முடியாது. இது நம்மை மாண்டு மடியச் செய்து விடும். தன்னையை அழிக்கக் கூடிய கோபத்தை விட்டொழித்தால் தான் நாம் நினைப்பதெல்லாம் நிறைவேறும் கைகூடும். ஆகையால் இப்படிப்பட்ட அழிவை உண்டுபண்ணும் கோபத்தை நம் உள்ளத்தினின்று தூக்கியெறிய வேண்டும்; என்ற எண்ணத்தை இடைக்காட்டுச் சித்தர்,

"சினம் என்னும் பாம்பிறந்தால் தாண்டவக் கோனே!-

யாவும் சித்தி என்றே நினையடா தாண்டவக்கோனே! பா: 20

என சிந்தனை செய்கிறார்.

**ஆசை**

மனிதப் பிறவியின் முக்கிய நோக்கம் மீண்டும் பிறவாது இறைவனை அடைதலேயாகும். இதற்கு எந்த பொருளிடத்தும் ஆசை கொள்ளாது இருத்தலே எளிய வழியாகும். ஆசை என்பது அடங்காத பசு. அந்தப் பசுவின் அடங்காதத் தன்மை அழிய வேண்டும். ஆசையைக் கட்டுக்குள் அளவுக்குள் எல்லைக்குள் அடக்கிவிட வேண்டும். அதை செய்துவிட்டால் இந்த உலகில் உள்ள உண்மைகள் முழுவதையும் கண்டறிய முடியும். ஒருவர் உலகம் முழுவதையும் கண்டறிய வேண்டும் என எண்ணினால் முதலில் ஆசையை அழித்துவிடு என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்,

"ஆசை யென்னும் பசுமாளின் தாண்டவக்கோனே

அண்டம் எல்லாம் கண்டறிவாய் தாண்டவக்கோனே". பா :20

ஏன கூறுகிறார். ஆசை என்னும் வலைக்குள் அகப்பட்டவுடன் வீடு அழிந்துவிடும் என்பதை

" ஆசை வலைக்குள் அகப்பட்டதும் வீடு

அப்போதே வெந்தே அழிந்திட்டதும்" பா : 51

என்று கொங்கணச் சித்தர் எடுத்துக் காட்டுகின்றார். இறைவனை அடைந்து பேரின்ப நிலையை எய்த ஆசைத் தடையாக இருப்பதை அகப்பேய் சித்தர்

" ஆசை அற்றவிடம் ஆரங் கண்டாயே" பா : 41

வலியுறுத்துகின்றார். ஆசையே அனைத்து தீங்குக்கும் வேராக இருக்கின்றது எனவே, ஆசையைத் துறப்போம் அமைதியான வாழ்வை நடத்துவோம் என்பதை சிவவாக்கியர் தம் பாடலில் பதிவு செய்திருக்கிறார்.

" ஆசையற்ற காலத்தில் ஆதி வத்துவை

அடையலாம் என்று துணிந்து ஆடுபாம்பே" பா : 100

கொலை செய்யாதே, ஊன் உண்ணாதே

தன்நலம் பற்றியேனும், கோபம் பற்றியேனும், அறியாமையினாலும் பிற உயிர்களைக் கொல்வது " கொல்லாமை" என்னும் தலைப்பினில் தலையாய அறமாக அனைத்துத் தமிழ் இலக்கியங்களும் எடுத்துப் பேசுகின்றன. சித்தர்கள் உயிர்க் கொலையைச் செய்யாதே என்று தம் பாடல்களில் வலியுறுத்துகின்றனர்.

" மோகமுடன் பொய் களவு கொலை செய்யாதே" பா : 2

என்று அகத்தியரும்

" அஞ்ச உயிர்மடி யாதே" பா : 29

பிறர் அஞ்சும்படி உயிர்க் கொலை செய்யாதே என்று கடுவெளிச் சித்தர் எச்சரிக்கின்றார். மண்ணில் வாழ்கின்ற உயிர்கள் யாதொன்றையும் கொன்று வதைத்துப் புசித்து வாழாமல், அவ்வுயிர்களைத் தன்னுடைய உயிர்போல எண்ணி நினைத்துத் தவம் முடிப்பது எந்தக் காலம்?

"மன்னுயிரைக் கொன்று வதைத்து உண்டு உழலாமல்

தன்னுயிர்போல் எண்ணித் தவம் முடிப்பது எக்காலம்? பா : 14

என்று பாடி ஏங்குகின்றார் பத்திரகிரியார்.

**சமூகச் சிந்தனைகள்**

இன்றைய நவீன காலத்தில் துறவி என்று சொல்லிக் கொண்டு மக்களிடம் காசைச் கநந்து இயற்கை வளங்களை அழித்து புதுபுதுக் கட்டடங்களைக் கட்டி, அங்கு இயற்கைக்கு புறமாக பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பேராசை மனிதர்களின் மத்தியில் சமூக வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதை பட்டினத்தார் எடுத்துரைக்கின்றார்.

" பேய்போலத் திரிந்து
பிணம் போலக் கிடந்து இட்ட பிச்சையெல்லாம்
நாய் போல அருந்தி

நரிபோல உழன்று நன் மங்கையரைத்
தாய் போல கருதிக்
தமர் போல தாழ்மைச் சொல்லி
சேய்போல் இருப்பார் கண்டீர்
உண்மை ஞானம் தெளிந்தவரே”

பேய் போன்று எங்கும் அலைந்து திரிந்து, பின்பு எந்த இடத்திலாவது பிணம் போலக் கிடந்து அமர்ந்து மக்களிடம் கிடைக்கும் உணவை நாய் போன்று சாப்பிட்டு, நரி போல உழன்று பெண்களை தாயென்று கருதி அவர்களை நல்வழியில் செல்ல அறிவுரை பல செபல்லி குழந்தையைப் போன்று இருப்பார் சித்தர்கள். விந்தைகள் நிறைந்ததுதான் சித்தர்களின் வாழ்க்கை. தன்னலமற்று வாழந்தவர்கள். சாதி பேதத்தைக் கடந்த யோகிகள். ஊலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் பசிப்பிணியற்று, நல்வாழ்வு வாழ வேண்டும் என பிரயாசப்பட்டவர்கள். சமூக மக்களின் வாழ்க்கையில் அக்கறைக் கொண்டு வாழ்ந்தவர்கள். இவர்களது நெறிகளைக் கைக்கொண்டு சமூக வாழ்ககை வாழும் பலர் சமூகத்தை சீர்குலைத்துக் கொண்டிருப்பது மிகுந்த மனவருத்தத்தை அளிக்கின்றது.

**அறிவியல் சிந்தனைகள்**

இன்றிருக்கும் பரிசோதனை சாலைகள் அன்று இல்லை. இருப்பினும் சித்தர்களின் ஆராய்ச்சிகள் இன்றைய விஞ்ஞான ஆய்வுகளுடன் ஒத்திருக்கின்றன. காட்டிலும் மலையிலும் குகையிலும் வாழ்ந்து சித்தர்கள் ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கின்றார்கள். இவர்கள் கண்டறிந்த வாத வித்தையே சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாகும். உலோக வகைகள், உப்பு வகைகள், வேர் வகைகள், பட்டை வகைகள், பிராணிகளின் உடம்பிலே உற்பத்தியாகும் கோரோசின் முதலியவைகளின் குணங்களை ஆராய்ந்து கண்டிருப்பது போற்றுதற்குரியது.

ஒருவர் தனது உடல்நலக் குறைவால் மருத்துவமனைக்கு செல்லும் போது மருத்துவர் முதலில் கேட்பது, அவரது உடல் வேதனையை. பிறகு நாடித் துடிப்பு, நா, கண், இரத்தம், குரல், தொடுதல் போன்ற அடிப்படைப் பரிசோதனைகளை செய்வார். அதன் பின்பே நோயாளியின் நோய் பற்றிய சிந்தனைகளை பல கருவிகளின் மூரமாக ஆராய்து நோயின் நிலையினை நோயாளிக்கு அறிவிப்பார்கள். இம்முறையை தொழில் நுட்பகருவிகள் ஏதுமின்றி அன்றே அறிந்து மருத்துவம் பார்த்திருக்கும் தன்மையினை உணரும்பொழுது சித்தர்கள் அறிவியலின் முன்னோடிகள் என்றே கூறுதல் வேண்டும்.

1.நோய்

2. நோய்க்கான காரணம்

3. நோயைத் தீர்க்கும் வழி

4. நோயின் காலம்

5. நோய்க்கு மருந்து

இவையே மருத்துவம் செய்வதற்கான வழிமுறையாகும். இதனைச் சித்தர்கள் நன்கு

அறிந்திருந்தனர். மனித சரீரத்தை மூன்று வகையாகப் பிரித்து சித்தர்கள் மருத்துவம் செய்திருக்கின்றனர். வாதம், பித்தம,; கபம் என சொல்லப்படும் மூன்றும் சரியளவு உடலில் இருக்கும் பொழுது நோய் மிகாது. இம்மூன்றில் ஏதேனும் ஒன்று மிகுந்தாலோ, குறைந்தாலோ நோய் மிகும் என்பதையும், நோய் வரும் என்பதையும் அறிந்து இருந்தனர்.

வாதம் (காற்று) சம்பந்தமான பிணிகள் - 80

பித்தம் (உஷ்ணம்) சம்பந்தமான பிணிகள் - 40

சிலேத்துவம் (நீர்) சம்பந்தமான பிணிகள் - 9

என பட்டியலிட்டு சித்தர்கள் அறிவியல் சிந்தனையின் வழியில் மருத்துவம் செய்திருக்கின்றனர்.

தொகுப்புரை

உடலையும் வாழ்க்கையையும் பொய் என்று கூறும் சமண பௌத்த மதங்களின் கொள்கைகளை மறுத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், உடல் பொய் இல்லை, மெய் என்றும் இறைவன் குடி கொள்ளும் கோவில் என்றும் மக்களுக்குப் போதித்தனர். தமிழ் மொழியிலேயே மருத்துவத்தை எழுதி தமிழ் மொழியையும் வளர்த்தனர். இந்நில உலகில் மனிதர்கள் நல்வழியில் வாழ்வதற்கு தேவையான வைத்திய முறைகளைத் தந்ததோடு, சித்தர்கள் பதிவிட்டு சென்ற வாழ்வியல் சிந்தனைகள், சமூக சிந்தனைகள், அறிவியல் சிந்தனைகள், மருத்துவச் சிந்தனைகள் என யாவும் உலகிற்கு மகா கொடையாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.

**பார்வை நூல்கள்**

ஆனந்த ரவிசாஸ்திரி, க.ஆ., சித்தர்களின் சமுதாயச சிந்தனைகள், பாவை பப்ளிகேஷன்ஸ்(பி), சென்னை, முதல் பதிப்பு – டிசம்பர் 2008.

கருணாநிதி, முனைவர் ஆ., சித்தர் இலக்கியங்களில் சமூகப்பார்வை, தாமரை பப்ளிகேஷன்ஸ்(பி), சென்னை, முதல் பதிப்பு – டிசம்பர் 2007.

திருமுருகன்,இரா.,(தொ.ஆ), சித்தர் பாடல்கள், சாகித்திய அகதெமி, புதுடெல்லி, முதல் பதிப்பு – 2012.